

# இயேசுவின் பொன்மொழிகள் நூறு

# AMDG

# இயேசுவின் பொன் மொழிகள் நூறு


| | |
|---|---|
| ஆறுதல் மொழிகள் | 01–23 |
| ஞான மொழிகள் | 24–48 |
| போதனை மொழிகள் | 49–84 |
| வாக்குறுதி மொழிகள் | 85–113 |
| எச்சரிக்கை மொழிகள் | 114–135 |
| பொது அறிவு | 136–145 |


**புதிய மொழி பெயர்ப்பு**
**பொதுவிவிலியத்திலிருந்து தயாரிக்கப்பட்ட**
**இறை வசனங்கள்**

# காலை ஜெபம்

இயேசுவின் திரு இருதயமே, நான் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் தாமே திருப்பீடத்தில் உம்மையே ஒப்புக்கொடுக்கும் சகல கருத்துக் களுக்காகவும், அடியேன் இன்று செய்யும் ஜெபங்களையும், செயல்களையும், படும் துன்ப வருத்தங்களையும், புனித கன்னிமரியாளின் மாசற்ற திரு இருதயத்தின் வழியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

இந்த மாதத்திற்கும், இந்த நாளுக்கும் ஜெப அப்போஸ்தல சபையின் விசேஷ கருத்துக் களுக்காகவும், என் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உத்தரிக்கிற ஆத்துமாக்களின் கடன்களுக்கு உதவியாகவும், நான் இன்று அடையத்தகும் ஞான பலன்களை எல்லாம் அடைய ஆசைப்படுகிறேன். இயேசுவே உமக்குப் புகழ். இயேசுவே உமக்கு நன்றி. அல்லேலூயா!

ஆண்டவரே, நான் முற்றிலும் உமக்கே சொந்தம். உமக்காகவே வாழ்கிறேன். உமக்காகவே கஷ்டப்படுகிறேன். உமக்காகவே இன்ப துன்பங்களை எல்லாம் அனுபவிக்கிறேன். என் அறிவு, ஞானம், புத்தி, காசுபணம், வீடுவாசல், சொத்து சுகம், மனைவி மக்கள் எல்லாம் நீர் கொடுத்தது. இவை எல்லாவற்றையும் உமது பாதத்திலே வைக்கிறேன். நாங்கள் எங்கிருந்தாலும் உமக்கு பயந்து நடக்கவும், பணிந்து வாழவும் அருள்புரியும். உமது சித்தப்படியே எங்களை வழி நடத்தும் ஆமென்.

இயேசுவின் திருஇருதயமே, என் நம்பிக்கை யாவும் உமது பேரில் வைக்கிறேன்.

நித்தியபிதாவே, தங்கள் நேசகுமாரனும், எங்கள் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் உடலையும், உதிரத்தையும், ஆன்மாவையும், தெய்வீகத்தையும், எங்கள் பாவங்களுக்கும், அகில உலகின் பாவங்களுக்கும் பரிகாரமாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம்.

ஆமென்.

# ஆறுதல் மொழிகள்

1. நான் உன்னைக் கைவிடுவதும் இல்லை
உன்னை விட்டு விலகுவதும் இல்லை
இ.ச. 31 : 6, எபி : 13:5

2. வழியும் உண்மையும் வாழ்வும் நானே, என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை.
யோ 14:6

3. உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும்போது எதைக்குறித்தும் மனமொத்திருந்தால், விண்ணுலகிலிருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். மத் : 18:19

4. நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்.
யோ : 15:16

5. பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன். மத்:11:28

6. ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள், ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே. லூக் : 6:20

7. நான் தாயின் கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே ஆண்டவர் என்னை அழைத்தார்; என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். எசா : 49:1

8. தாய் தன் பிள்ளையை மறந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன். எசா. 49 : 15

9. என் உள்ளங்கையில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன். எசா 49:16

10. இயேசு நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார் : நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார் : நமக்கு நிறைவாழ்வையளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவருடைய காயங்களால் நாம் குணமடைகின்றோம். எசா : 53:5

11. தந்தையே இவர்களை மன்னியும்; ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை. லூக் : 23:34

12. நானே உன் கடவுளாகிய ஆண்டவர், உன் வலக்கையைப் பற்றிப்பிடித்து அஞ்சாதே உனக்குத் துணையாய் இருப்பேன். எசா : 41:13

13. நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். யோ : 17:6

14. நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்காக தம் உயிரைக் கொடுப்பார். யோ : 10:11

15. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்: கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள். யோ : 14:1

16. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்.
யோ. 12:46

17. நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன், ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக் கொள்வேன்.
எசா 54:7

18. மலைகள் நிலைசாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது.
எசா : 54:10

19. நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்து விட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல, எனவே உலகம் உங்களை வெறுக்கிறது. யோ: 15:19

20. பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் போய் கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல பாவிகளையே அழைக்க வந்தேன். மத் : 9:13

21. உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று
மத் : 9:22

22. நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், அப்பொழுது உலகம் மகிழும், நீங்கள் துயருறுவீர்கள். ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும். யோ : 16:20

23. கடவுள் உங்கள் தந்தையெனில் நீங்கள் என் மேல் அன்பு கொள்வீர்கள். நான் கடவுளிடமிருந்தே இங்கு வந்துள்ளேன். நானாக வரவில்லை அவரே என்னை அனுப்பினார். யோ. 8:42

## ஞான மொழிகள்

24. ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். யோ 8:58

25. விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே யோ : 6:51

26. ஆண்டவரே, ஆண்டவரே, எனச் சொல்பவர் எல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை, மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளப்படி செயல்படுபவரே செல்வர். மத் : 7:21

27. உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும், உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. மத் : 32:37

28. நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார். நானும் அவரை அறிந்திருக்கிறேன். யோ : 10:14

29. என்னைக் காண்பது தந்தையை காண்பது போலாகும். யோ : 14:9

30. மனிதர் பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர்; ஆண்டவரோ இதயத்தைப் பார்க்கின்றார். 1 சாமு. 16:7

31. நானும் என் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம். யோ 10:30

32. நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். இதயத்தைக்கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள். யோவெல் : 2:12

33. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய். மத் : 4:10

34. நல்ல கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு நெருப்பில் எறியப்படும். மத்: 7:19

35. செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது. மத் : 19:24

36. விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா. மத்: 24:35

37. தம்மைத்தாமே உயர்த்துவோர், தாழ்த்தப்பெறுவர் தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர் லூக். 14:11

38. தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். மத் : 5:8

39. உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு. யோ : 17:3

40. நீதியுள்ள தந்தையே, உலகம் உம்மை அறியவில்லை ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் என அவர்களும் அறிந்து கொண்டார்கள். யோ.17:25

41. எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை, நாங்கள் மன்னித்துள்ளதுபோல், எங்கள் குற்றங்களை மன்னியும். மத் : 6:12

42. ஆண்டவர் என்றென்றும் அரசாள்வார் வி.ப : 15:18

43. விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது. மத் : 10:7

44. உள்ளத்தின் நிறைவையே வாய்பேசும் லூக் : 6:45

45. ஒருவர்தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி, இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன். யோ : 3:5

46. என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு. யோ : 4:34

47. மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர். மத் : 4:4

48. தொடக்கமும் நானே, முடிவும் நானே; என்னையன்றி வேறு கடவுள் இல்லை. எசா : 44:6

# போதனை மொழிகள்

49. நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாய் இருக்க முடியாது. மத் : 5:14

50. விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும்' ஆவார். மத் 12:50

51. சீசருக்கு (அரசனுக்கு) உரியதை சீசருக்கும் கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள் மத் : 22:21

52. உங்கள் வலக்கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால், அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள்; உங்கள் உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை இழப்பதே நல்லது. மத் : 5:29

(கண்ணைப்போன்ற முக்கியமான ஒரு நபரோ அல்லது பொருளோ, நம்மைத்தீமைக்கு வழி காட்டினால் அவர்களை விட்டு விலக வேண்டும் என்பது பொருள்)

53. ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம், ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்கவல்லவருக்கே அஞ்சுங்கள். மத்: 10:28

54. நீ என்னைக் கண்டதால் நம்பினாய் : காணாமல் நம்புவோர் பேறு பெற்றார். யோ : 20:29

55. நீங்கள் பேசும்போது ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள் மத் : 5:37

56. உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். மத் : 5:44

57. நீங்கள் தர்மம் செய்யும் பொழுது உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். மத் : 6:3

58. விண்ணுலகில் உங்கள் செல்வத்தைச் சேமித்துவையுங்கள். அங்கே பூச்சியோ, துருவோ அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. மத் : 6:20

59. நீங்கள் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்யமுடியாது. மத் : 6:24

60. பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள் அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள். மத் : 7:1

61. சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது. மத் : 19:14

62. உன்மீது நீ அன்பு கூறுவது போல, உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூறுவாயாக.
மத் : 22:39

63. மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை, விண்ணுலகில் உள்ள என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக் கொள்வேன். மத் 10:33

64. எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். லூக் : 23:28

65. என்னைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்வோர் பேறு பெற்றோர். லூக் : 7:23

66. உண்மையை எடுத்துரைப்பதே என் பணி; இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காக உலகிற்கு வந்தேன்; உண்மையைச் சார்ந்த அனைவரும் என் குரலுக்கு செவி சாய்க்கின்றனர். யோ: 18:37

67. இருவரும் (கணவனும், மனைவியும்) ஒரே உடலாய் இருப்பர்; இனி அவர்கள் இருவரல்ல ஒரே உடல்; எனவே கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும். மாற் : 10:8–9

68. அனைத்திற்கும் மேலாக இறைவனின் ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள் அப்போது இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக்கொடுக்கப்படும். மத்:6:33

69. கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். மத் : 7:7

70. உங்கள் கண்ணிலிருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல், உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன்? மத் : 7:3

71. ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். யோ : 13:34

72. நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள்; ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய இயலாது. யோ : 15:5

73. இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வதைவிட, அவ்வாறு செய்பவரது கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி அவரைக் கடலில் தள்ளிவிடுவது நல்லது. லூக் : 17:2

74. நீர்விருந்து அளிக்கும் பொழுது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும், கால் ஊன முற்றோரையும், பார்வையற்றோரையும் அழையுங்கள். லூக் : 14:13

75. நான் உங்களிடம் சொல்ல வேண்டியவை இன்னும் பல உள்ளன. ஆனால் அவற்றை இப்போது உங்களால் தாங்க இயலாது. யோ : 16:12

76. நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. யோ 15:12

77. உயிர்த் தெழுந்தவர்களுள் யாரும் திருமணம் செய்து கொள்வதில்லை; அவர்கள் விண்ணக தூதரைப் போல இருப்பார்கள். மத் : 22:30

78. என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். லூக்: 9:23

79. உங்களுள் தம் உடமையை எல்லாம் விட்டு விடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது. லூக்: 14:33

80. இச்சிறியோருள் ஒருவர் கூட நெறி தவறிப்போகக் கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம். மத் : 18:14

81. இயேசு நலமடைந்தவரைக் கோவிலில் கண்டு, நீர் நலமடைந்துள்ளீர், இதைவிடக்கேடானதெதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர் யோ:5:14

82. மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால், உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்.
மத் : 6:14

83. நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்.
லூக் : 6:38

84. பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். லூக் : 6:31

# வாக்குறுதி மொழிகள்

85. நீங்கள் என் பெயரால் எதைக்கேட்டாலும் செய்வேன். யோ : 14:14

86. நான் தந்தையினுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? யோ : 14:10

87. அவமானத்திற்கு பதிலாக நீங்கள் இரு பங்கு நன்மை அடைவீர்கள்; அவமதிப்புக்குப் பதிலாக உங்கள் உடைமையில் மகிழ்வீர்கள்; ஆதலால் நாட்டில் உங்கள் செல்வம் இரு மடங்காகும்; முடிவில்லா மகிழ்ச்சியும் உங்களுக்கு உரியதாகும்.
எசா : 61:7

88. நான் உன்னை உருவாக்கினேன்; நீதான் என் அடியான்; இஸ்ரயேலே நான் உன்னை மறக்க மாட்டேன்; உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன்பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பிவா.
எசா : 44:21–22

89. விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும்; ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா. லூக் 21:33

90. என் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். யோ : 8:51
(ஆத்தும மரணம் அடையமாட்டார்கள்; அதாவது நரகத்திற்குப்போகமாட்டார்கள் என்பது பொருள்)

91. உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.
யோ : 11:26

92. அஞ்சாதே, பேசிக்கொண்டே இரு; நிறுத்தாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். எவரும் உனக்கு தீங்கு இழைக்கப்போவதில்லை இந்நகரத்தில் எனக்குரிய மக்கள் பலர் இருக்கின்றனர். தி.தூ.ப. 18:9–10

93. உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன். யோ : 16:33

94. இதோ, உலகம் முடியும்வரை எந்நாளும் நான் உங்களோடு இருப்பேன். மத் : 28:20

95. என் பெயரின் பொருட்டு எல்லோரும் உங்களை வெறுப்பார்கள்; இருப்பினும் உங்கள் தலைமுடி ஒன்று கூட விழவே விழாது. லூக் : 21:17–18

96. நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். யோ : 14:18

97. உங்களுள் ஒவ்வொருவருக்கும் அவரவர் செயல்களுக்கு ஏற்ப கைமாறு அளிப்பேன். தி.வெ. :2:23

98. என் உறைவிடம் அவர்களுக்கு நடுவே இருக்கும் நான் அவர்களுக்குக் கடவுளாய் இருப்பேன். அவர்கள் எனக்கு மக்களாய் இருப்பர். எசே: 37:27

99. நானே ஆண்டவர், வேறு எவரும் இல்லை. என்னையன்றி வேறு கடவுள் இல்லை. நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு வலிமை அளித்தேன். எசா: 45:3

100. எனக்கு செவி கொடுங்கள், என்னிடம் வாருங்கள், கேளுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள். எசா: 55:3

101. உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது, அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். யோ : 16:13

102. எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும், எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா.
யோ : 20:23

103. மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மத் : 9:6

104. மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.
மத் : 20:28

105. என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேராக பெற்றுக் கொள்ளுங்கள். மத் : 25:34

106. என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத்தீர்ப்புக்கு உள்ளாகமாட்டார்கள். யோ : 5:24

107. எனது சதையை உண்டு, எனது இரத்தத்தைக் குடிப்போர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். யோ : 6:54

108. ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும், அப்பொழுது நீரும் உன் வீட்டாரும் மீட்படைவீர்கள். தி.தூ.ப. : 16:31

109. நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். யோ : 15:16

110. உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கைக் கொள்பவர் இறப்பினும் வாழ்வர் (இவ்வுலகில் இறந்தாலும் பரலோகத்தில் முடிவில்லா வாழ்வு வாழ்வர் என்பது பொருள்) யோ 11:25

111. நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என்று உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன். லூக்: 23:43

112. நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் பொழுது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன். யோ: 12:32

113. நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டு இருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவைத்திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள். தி.வெ.: 3:20

# எச்சரிக்கை மொழிகள்

114. என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும் என்று மறை நூலில் எழுதியுள்ளது; ஆனால் நீங்கள் இதை கள்வர் குகை ஆக்குகிறீர்கள். மத் : 21:13

115. உங்களுள் ஒவ்வொருவரும் தங்கள் சகோதரர் சகோதரிகளை, மனமார மன்னிக்காவிட்டால், விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார். மத் : 18:35

116. இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர்; இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கின்றது மத் : 15:8

117. தன் சிலுவையைச் சுமக்காமல் என்பின் வருபவர் என் சீடராய் இருக்கமுடியாது. லூக் : 14:27

118. செல்வர்களே, ஐயோ உங்களுக்குக் கேடு; ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள். லூக் : 6:24

119. ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தில் ஏற்கனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று. மத் : 5:28

120. தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் அவருக்கு எதிராக விபசாரம் செய்கிறான்; தன் கணவரை விலக்கிவிட்டு வேறொருவரை மணக்கும் எவளும் விபசாரம் செய்கிறாள். மாற் : 10:11–12

121. நான் யார் மீது அன்பு செலுத்துகிறேனோ, அவர்களைக் கடிந்து, தண்டித்து திருந்துவேன். ஆகவே நீ ஆர்வம் கொண்டு மனம் மாறு.
திி.வெ. : 3:19

122. தந்தையிடம் நீர் ஏன் என்னை இப்படிப் பிறப்பித்தீர் என்றும், தாயிடம் நீ ஏன் என்னை இப்படிப் பெற்றெடுத்தாய் என்றும் கேட்பவனுக்கு ஐயோ கேடு. எசா : 45:10

123. மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட, உங்கள் நெறி சிறந்திருக்கட்டும், இல்லையெனில் நீங்கள் விண்ணரசில் புகமுடியாது மத் 5:20

124. உங்களைக் கொல்லுபவர்கள், கடவுளுக்குப் பலி செலுத்துவதாக எண்ணிக் கொள்வார்கள்.
யோ : 16:2

125. இன்னும் சிறிது காலத்தில் நான் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், பாலைநிலத்தையும் நடுக்கமுறச் செய்வேன்; வேற்றினத்தார் அனைவரையும் நிலைகுலையச் செய்வேன். ஆகாய் : 2:6

126. நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் எழும். பல இடங்களில் பஞ்சமும் நிலநடுக்கமும் ஏற்படும். மத் : 24:7

127. பலர் என் பெயரை வைத்துக்கொண்டு வந்து நானே அவர் (இயேசு) என்றும் காலம் நெருங்கி வந்துவிட்டது என்றும் கூறுவார்கள். அவர்கள் பின்னே போகாதீர்கள். லூக் : 21:8

128. யாராவது உங்களிடம் இதோ மெசியா இங்கே இருக்கிறார், அதோ அங்கே இருக்கிறார் எனச் சொன்னால் நீங்கள் நம்பவேண்டாம். மத்: 24:23

129. சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள் அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும், என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். மத் : 25:41

130. என் விண்ணகத்தந்தை நடாத எந்த நாற்றும் வேரோடு பிடுங்கப்படும். மத் : 15:13

131. என்னைப்புறக்கணித்து, நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவருக்குத் தீர்ப்பளிக்கும் ஒன்று உண்டு; என் வார்த்தையே அது. இறுதி நாளில் அவர்களுக்கு அது தண்டனைத் தீர்ப்பு அளிக்கும். யோ : 13:48

132. மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள் லூக் : 13:3

133. மண்ணுலகில் மக்களினங்கள் கடலின் கொந்தளிப்பின் முழக்கத்தினால் கலங்கி என்ன செய்வதென்று தெரியாது குழப்பம் அடைவார்கள். உலகிற்கு என்ன நேரிடுமோ என எண்ணி மனிதர் அச்சத்தினால் மயக்கமுறுவர் லூக் : 21:25–26

134. தீங்கு புரிவோர் தீங்கு புரிந்துகொண்டே இருக்கட்டும்; இழுக்கானவற்றைச் செய்வோர் இழுக்கானவற்றைச் செய்து கொண்டே இருக்கட்டும்; தூயோர் தூய்மையானவற்றை செய்து கொண்டே இருக்கட்டும்; இதோ நான் விரைவில் வருகிறேன். அவரவர் செயலுக்கு ஏற்ப அவரவருக்கு நான் அளிக்க விருக்கின்ற கைமாறு என்னிடம் உள்ளது. தி.வெ. : 22:11–12

135. கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது (இயேசுவின்) குரலைக்கேட்டு வெளியே வருவர்; நல்லன செய்தோர் வாழ்வுபெற உயிர்த்தெழுவர்; தீயன செய்தோர் தண்டனைத்தீர்ப்புப் பெற உயிர்த்தெழுவர். யோ : 5:28–29

## பொது அறிவு

136. Alleluiah = Glory to God (அல்லேலூ + யாவே) என்ற சொற்கள் திரிந்து அல்லேலூயா என்றாகி விட்டது. யாவே–இறைவனுக்குப் புகழ்ச்சி.

137. Hosanna எபிரேயச்சொல்—வெற்றியைக்குறிக்கும். ஆண்டவரே எங்களை விடுவித்தருளும்.

138. JHS = Jesu Hominus Salvator இயேசு மனுக்குலத்தின் மீட்பர்.

139. IHS = JHS கிரேக்க மொழியில் J இல்லை அதனால் I ஐ உபயோகிக்கிறார்கள். Jesu = Iesu.

140. INRI = Iesus Nazarenus Rex Iudaeorum. Jesus of Nazareth King of Jews நசரேயனாகிய இயேசு யூதர்களின் அரசர்.

141. AMDG = Ad Majorem Dei Gloriam ஆண்டவரின் அதி மிக மகிமைக்காக.

142. A.D = Anno Domino ஆண்டவரின் ஆண்டு = கி.பி.

143. B.C. = Before Christ கி.மு. கிறிஸ்துவுக்கு முன்

144. CBCI = Catholic Bishops Conference of India இந்தியக் கத்தோலிக்க ஆயர்களின் பேரவை.

145. OK = Oll Karrect இது All Correct என்ற சொற்களை கல்வி அறிவற்ற அமெரிக்கக்கறுப்பு இனத்தவர் உபயோகித்தது. இன்று அகில உலகிலும் உபயோகமாகிறது.